1971 டிசம்பர் 11]

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : தலைவர் அவர்களே, இலங்கையில் எங்கோ ஓரிடத்தில் இராவணனுடைய உடல் ஒரு மலை உச்சியின் மீது பாதுகாக்கப்பட்ட நிலைமையில் வைத்திருப்பதாகவும் அதைக் கண்டுபிடிக்க இலங்கை அரசு முயற்சி செய்வதாகவும் சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் செய்தி வந்தது. ஆனால், இராவணனைவிட, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வாலியின் பிரதாபம்தான் முக்கியமானது என்று நமக்குத் தெரிய வருகிறது. ஆகவே, வாலியின் உடல் எங்காவது இருக்கிறதா என்று கண்டுபிடிக்கவும், அதைப்பற்றி ஒரு காவியம் இயற்றி, பள்ளிகளில் அதைப் பாடப் புத்தகத்தில் சேர்க்கவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இராவணனுடைய உடல் இருப்பதாகச் சொல்லப்படுவதும் வாலியினுடைய உடலைத் தேடுவதும் இரண்டுமே இராமாயணம்தான். (சிரிப்பு)

மத்திய காவல் படை

*246 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ள தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக காவல் படை ஒன்றினை தமிழகத்தில் மத்திய அரசு அமைத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். மணலியிலுள்ள சென்னை உரத் தொழிற்சாலையிலும் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திலும் மத்தியத் தொழில் பாதுகாப்புப் படை வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : இந்தத் தொழிற்சாலையைப் பாதுகாப்பதன் பொறுப்பை மாநில அரசுப் போலீஸ் படையிடம் ஒப்படைத்தால் என்ன ? இதில் ஏன் மத்திய அரசு தம்முடைய நிர்வாகத்தினுடைய காவல் படையை அமைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய பாதுகாப்புப் படை இங்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், இந்த மசோதா சட்டமாக இயற்றப்படுவதற்கு உடந்தையாக இருக்க முடியாது என்றும், மாநில அரசுகள் சார்பில் நாம் தெரிவித்திருந்தோம். ஆனால், மசோதா நம்முடைய கருத்துக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இது தவிர்க்க முடியாத ஒன்றாக இன்றைக்கு ஆகிவிட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மசோதா மத்திய அரசின் சார்பில் கொண்டுவந்தபோது அநேகமாக எதிர்க்கட்சியினரெல்லாம் எதிர்த்திருக்கிறார்கள். அப்படியிருக்கின்றபோது, தமிழகத்தில் இருக்கக்கூடிய மத்திய அரசினுடைய பொதுத் தொழிற்சாலைகளில் தமிழகத்திலிருக்கும் போலீஸ் பாதுகாப்பே போதுமானது, மேற்கொண்டு இது தேவை இல்லை என்று இப்போதாவது நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தகவல் கொடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மீண்டும் ஒரு முறை சமயம் ஏற்படுகிற நேரத்தில் அதுபற்றிய கருத்தினை மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த மத்திய பாதுகாப்புப் படை பற்றிய மசோதா நிறைவேற்றப்பட்டாலும் தமிழகத்தில் மட்டும்தான் இப்பொழுது "இம்ப்ளிமென்ட்" செய்திருக்கிறூர்களா? அல்லது, அகில இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் இந்தப் படை அமைத்திருக்கிறூர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழகத்தில் இரண்டு இடங்களில் அமல்படுத்தப்பட்டது பற்றித்தான் விவரம் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் ஒருவேளை அமல்படுத்தப்பட்டிருக்கக் கூடும். அதற்கு ஒன்றும் தடை இல்லை.

அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்டோருக்குச் சலுகைகள்

*247 **வினு—திரு. எம். முத்தையா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பதவிகளுக்கு நியமனம் செய்ய நடத்தப்படும் தேர்வுகளில், தகுதியும், திறமையும் உடைய தாழ்த்தப்பட்ட நபர்களுக்குப் பொது ஸ்தானங்களில் வாய்ப்பளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) தமிழ்நாடு மாநில சார் பணிகள் விதிகளின் 22 (பி) பொது விதிக்கிணங்க, தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படும் பதவிகளுக்கு அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர், ஆகியோரின் விண்ணப்பங்களும் கருதிப் பார்க்கப்பட வேண்டும். அரிசனங்கள், பழங்குடி மக்கள் அல்லது பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த விண்ணப்பதாரர் ஒருவர் தகுதியின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்டால், அதன் காரணமாக அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருக்காக ஒதுக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை எவ்வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது.

தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள செய்திப்படம்

*248 **வினு—திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு செய்தித் துறையினர் தயாரித்துள்ள செய்திப் படம் ஒன்றைத் திரையிட மத்திய சென்சார் போர்டு அண்மையில் தடை விதித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) தடை விதிக்கவில்லை. ஆனால், ஒரு செய்தி மலரில் விளக்கவுரையில் இருந்த சொற்றொடர் ஒன்றுக்கும் மற்றொரு செய்தி மலரில் இருந்த காட்சி ஒன்றுக்கும் தணிக்கைக்குழு மறுப்புத் தெரிவித்தது.

திரு. எஸ். கணேசன்: தடை விதிக்கப்படவில்லையென்றாலும், சில காட்சிகள் தவிர்க்கப்பட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தக் காட்சியில் எப்படிப்பட்ட கொள்கையைப்பற்றி வருகிறது என்று சொல்ல இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அதுபற்றிப் பேசுவதற்காக கோட்டையில் ஒரு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் நடைபெற்றது. அது தமிழக அரசு செய்தித் துறைப்